ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 31.08.2015 |

## 2015 ஓகத்தில் பணவீக்கம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07 = 100) 2015 ஓகத்தில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதன் முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்ட -0.2 சதவீதத்தில் மாற்றமடையாது காணப்பட்டது. 2015 ஓகத்தில் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2015 யூலையின் 1.3 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.



கொ.நு.விலைச் சுட்டெண் 2015 யூலையிலிருந்து ஓகத்திற்கு 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கொ.நு.விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட மாதாந்த வீழச்சி உணவு வகைப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும். 2015 ஓகத்து காலப்பகுதியில் காய்கறிகள், தேங்காய், தேங்காய் எண்ணெய், அரிசி, பச்சை மிளகாய், உடன்மீன்கள், உருளைக்கிழங்கு மற்றும் சிறிய வெங்காயம் என்பனவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. எனினும், இம்மாத காலப்பகுதியில் நெத்தலி, முட்டை , சில வகைப் பழங்கள் மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றின் விலைகள் அதிகரித்தன. உணவல்லா வகையினிடையே; ஆடை மற்றும் காலணி, தளபாடம், வீட்டுச் சாதனங்கள், வழமையான வீட்டுப் பேணல்; கல்வி; மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகிய துணை வகைகளின் விலைகள் அதிகரித்தன. 2015.07.14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் எல்.பி. எரிவாயுவின் விலைகளின் கீழ்நோக்கிய திருத்தத்தின் பகுதியளவான விளைவின் காரணமாக வீடமைப்பு, நீர், மின், வாயு மற்றும் எரிபொருள் ஆகிய துணைவகைகள் வீழ்ச்சியினைப் பதிவு செய்தன. நலன்; போக்குவரத்து; தொடர்பூட்டல்; பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் போன்ற ஏனைய துணை வகைகள் இம்மாத காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன.

பொருளாதாரத்தின் முக்கிய பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 யூலையின் 3.5 சதவீதத்திலிருந்து 2015 ஓகத்தில் 3.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் மூன்றாவது தொடர்ச்சியான மாதங்களாக 2.8 சதவீதத்தில் மாறாது பேணப்பட்டது.